சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,
முன்னிலை: முனைவர்.ச.கண்ணப்பன்,
ந.க.எண்.034110/W3/இ3/2024, நாள். 13.02.2026.

-----

பொருள்: பள்ளிக்கல்வி – மேல்நிலைக்கல்விப்பணி – அரசு மேல்நிலைப்பள்ளிகளில் காலியாக இருந்த முதுகலை ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–I / கணினி பயிற்றுநர் நிலை–I காலிப்பணியிடங்களில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனத்திற்கென தெரிவுசெய்யப்பட்ட பணிநாடுநர்களுக்கு – EMIS இணையதளம் வாயிலாக கலந்தாய்வு மூலம் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டு – 16.02.2026 முற்பகல் பணியில் சேர அறிவுரைகள் வழங்கப்பட்டமை – புதியதாக பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு – புதுமுக பயிற்சி வகுப்பு (Induction Training) – 18.02.2026 – அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில் நடைபெறுதல் – தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் தெரிவுப்பட்டியல் – பெறப்பட்ட நாள்.31.01.2026.
2. சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகள், ந.க.எண்.034110/W3/இ3/2024, நாள்.07.02.2026 மற்றும் 09.02.2026.
3. சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.034110/W3/இ3/2024, நாள்.10.02.2026.

-----

அரசு / நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 2023–24 மற்றும் 2024–25 ஆம் ஆண்டிற்கான முதுகலை ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–I / கணினி பயிற்றுநர் நிலை–I காலிப்பணியிடங்களில் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனத்திற்கென தெரிவுசெய்யப்பட்ட பணிநாடுநர்களுக்கு EMIS இணையதளம் வாயிலாக பணிநியமன கலந்தாய்வு 07.02.2026 மற்றும் 09.02.2026 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டு, 20 மாவட்டங்களை சார்ந்த பணிநாடுநர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பணிநியமன ஆணைகள் 13.02.2026 அன்று வழங்கப்பட்டு, இதர மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களால் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பணிநியமனம் பெற்ற அனைத்து ஆசிரியர்களும் தனிநபர் மருத்துவச்சான்று பெற்று, 16.02.2026 அன்று தாங்கள் நியமனம் பெற்றுள்ள பள்ளிகளில் பணியேற்க வேண்டும் அறிவுரைகள் பார்வை–3, இல் காணும் செயல்முறைகளில் வழங்கப்பட்டுள்ளது.

த.பி.பா...

இந்நிலையில், புதிதாக பணிநியமனம் பெற்று பணியில் சேர்ந்த இணைப்பில் காணும் மாவட்டங்களைச் சார்ந்த அனைத்து முதுகலை ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் நிலை–I / கணினி பயிற்றுநர் நிலை–I ஆகியோருக்கு கீழ்க்காணும் விவரப்படி புதுமுக பயிற்சி வகுப்பு (Induction Training) நடத்தப்படவுள்ளது என்ற விவரம் தொடர்புடைய மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. **இப்பயிற்சியினை மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கிவைக்கவுள்ளார்கள்.** இவ்விவரத்தினை புதிதாக பணியில் சேர்ந்துள்ள மேற்காணும் ஆசிரியர்களுக்கு தெரிவித்து அவர்களை பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள அறிவுறுத்துமாறு **தொடர்புடைய முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

| | |
|---|---|
| பயிற்சி நடைபெறும் நாள் | 18.02.2026<br>(புதன்கிழமை<br>காலை: 9.00 மணி முதல்) |
| பயிற்சி நடைபெறும் இடம் | அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்,<br>கோட்டூர்புரம், சென்னை. |

**இணைப்பு:**
பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டிய
ஆசிரியர்கள் மாவட்ட வாரியாக.

**பள்ளிக்கல்வி இயக்குநர்**

பெறுதல்
தொடர்புடைய முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

**நகல்.**

1. அரசு கூடுதல் தலைமைச்செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, தலைமைச்செயலகம், சென்னை–09.
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)
2. இயக்குநர், மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–06. (பயிற்சி வகுப்பிற்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திதரும்படி கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது)
3. நூலகர், அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம், கோட்டூர்புரம், சென்னை.
(தகவலுக்காக )

**இணைப்பு**

**புதுமுக பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள வேண்டிய நேரடி நியமனம் பெற்று புதிதாக பணியில் சேர்ந்த முதுகலை ஆசிரியர்கள் (மாவட்ட வாரியாக)**

| வ.எண். | மாவட்டம் | **ஆசிரியர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | கோயமுத்தூர் | 76 |
| 2. | கடலூர் | 48 |
| 3. | கன்னியாகுமரி | 36 |
| 4. | கரூர் | 32 |
| 5. | மதுரை | 107 |
| 6. | மயிலாடுதுறை | 7 |
| 7. | நாகப்பட்டினம் | 13 |
| 8. | பெரம்பலூர் | 27 |
| 9. | புதுக்கோட்டை | 33 |
| 10. | இராமநாதபுரம் | 29 |
| 11. | தென்காசி | 34 |
| 12. | தஞ்சாவூர் | 33 |
| 13. | தேனி | 36 |
| 14. | திருவாரூர் | 19 |
| 15. | தூத்துக்குடி | 29 |
| 16. | திருநெல்வேலி | 25 |
| 17. | திருப்பூர் | 47 |
| 18. | விருதுநகர் | 48 |
| | **மொத்தம்** | 679 |
| 19. | **சென்னை** | 42 |
| 20. | **செங்கல்பட்டு** | 29 |
| 21. | **திருவள்ளூர்** | 52 |
| 22. | **காஞ்சிபுரம்** | 19 |
| 23. | **இராணிப்பேட்டை** | 28 |
| 24. | **வேலூர்** | 25 |
| 25. | **விழுப்புரம்** | 64 |
| 26. | **திருவண்ணாமலை** | 83 |
| | **மொத்தம்** | 342 |
| | **மொத்தம்** | 1021 |

**பள்ளிக்கல்வி இயக்குநர்**